**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 198 of 2022

Deposition of D.W. 1

Name of the Witness: திரு.மாதையன்

Date : 03.01.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

10) என் அம்மாவின் நகைகள் 50 சவரன் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. நகைகளே கிடையாது. நகைகளை யாரும் பிரித்து கொடுக்கவில்லை என்றால நகைகளே இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் எனது அம்மாவின் நகைகள் இல்லை. என்னுடைய மனைவி தேன்மொழியின் நகைகளாக இருக்கலாம். பூர்வீக வீட்டை இடித்து விட்டு ஒரே மாதிரியாக இரண்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் போட்டோக்களில் உள்ள வீடு தான் தற்போது புதியதாக கட்டப்பட்டது. இரண்டு வீடுகளும் சேர்த்து 22x80 அடி. நான் வங்கியில் கடன் வாங்கிய ஆவணங்களை எடுத்து வரவில்லை. வங்கியில் கடன் வாங்கிய ஆவணங்களை எடுத்து வருகிறேன். அடுத்த விசாரணையின் போது எடுத்து வருகிறேன். தற்போது இரண்டு வீடுகள் கட்டப்பட்டுள்ள பூர்வீக இடம் எனது அப்பா பெயரில் தான் உள்ளது. அந்த இடம் இன்னும் பாகபிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஒரு வீடு எனக்கும், இன்னொரு வீடு 4ம் பிரதிவாதி குமாருக்கும் கட்டப்பட்டுள்ளது. என்னுடன் உடன்பிறந்தவர்கள் நாங்கள் வீடு கட்டுவதற்கு ஆட்சேபனை இல்லை என்று வாய்மொழியாக தான் சொன்னார்கள். ஆவணம் எதுவும் ஏற்படவில்லை.

*11)* கே.பி.என் திருமண மண்டபம் கட்டும் இடம் எனது அப்பா பச்சியப்ப செட்டியாருக்கு பாத்தியம் என்றாலும் தற்போது அவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. அந்த இடம் எனக்கும், என் தம்பிக்கு மட்டும் தான் பாத்தியம். *23.07.2001* தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தில் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் எனது அப்பா பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பிரிக்கப்படாத சொத்துக்கள் எனது அப்பா பெயரிலே உள்ளது. பாகபிரிவினை பத்திரத்தில் மனுதாரருக்கும் மற்றும் 2ம் பிரதிவாதிக்கும் தலா ரூபாய் 5 ஆயிரம் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

*12)* *1ம்* பிரதிவாதி பழனியம்மாள் அந்த பாகபிரிவினை பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை. அதில் அவர் ரூபாய் 5 ஆயிரம் பெற்று கொண்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் பழனியம்மாள் பணத்தை பெற்று கொண்டார். அன்று அவர் வரவில்லை. பழனியம்மாவுக்கும் எனக்கும் பிரச்சனை இருந்ததால் தான் அவர் கையெழுத்து போடவரவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பதிலுரையில் என்னுடன் உடன் பிறந்த வாதி, *1, 2* பிரதிவாதிகளுக்கு தலா ரூபாய் 5லட்சம் கொடுக்கப்பட்டதாக சொல்லியிருப்பது சரிதான். பணம் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை. அப்பா அவருக்கு பாகமாக வந்த சொத்தை விற்று தான் பணத்தை கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விற்ற ஆவணங்கள் தற்போது என்னிடம் இல்லை. சொத்தை விற்றதற்கான வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்கிறேன். என் அப்பா ஒரு ஏக்கர் *12* சென்ட் நிலத்தை விற்றார். எவ்வளவு ரூபாய்க்கு, யாருக்கு விற்றார் என்று தெரியவில்லை. அந்த கிரைய

தொகை ரொக்கமாக தான் வாங்கப்பட்டது. கிரைய தொகை எவ்வளவு என்று நியாபகம் இல்லை. அதற்கான வருமான வரி எதுவும் கட்டவில்லை. அந்த கிரைய பத்திரத்தை நான் அடுத்த வாய்தாவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

13) வாதிக்கு 50 சவரன் திருமணத்தின் போது கொடுக்கப்பட்டது. என்னுடைய அப்பா தான் வாதிக்கு அந்த நகைகளை கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகைபடம் வாதியின் திருமண போட்டோவா என்றால் இல்லை. வாதியின் திருமண புகைப்படம் எதுவும் என்னிடத்தில் இல்லை. வாதிக்கு எனது அப்பா தான் முறையாக திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் அம்மா, அப்பா உயிருடன் இருக்கும் வரை எனக்கும் வாதிக்கும் நல்ல உறவுமுறை தான் இருந்து வந்தது. என்னுடைய பதிலுரையில் 1987ல் வாதிக்கு திருமணம் ஆன பிறகு வாதிக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லியிருப்பது தவறு என்றால் வாதி வீட்டிற்கு வந்து போவார்.

14) ஹரிகரன் 4ம் பிரதிவாதியின் மகன். சிஏ படிப்பிற்கான எக்ஸ்சாம் எழுதுவதற்கு படித்து கொண்டிருக்கிறார். தீபன்சக்கரவர்த்தி என்னுடைய மகன். பிருந்தா என்னுடைய மகள். நான், 4ம் பிரதிவாதி, தீபன்சக்கரவர்த்தி, பிருந்தா எல்லோரும் சேர்ந்து 30.09.2024ல் ஹரிகரனுக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். நான், 4ம் பிரதிவாதி, ஹரிகரன், பிருந்தா எல்லோரும் சேர்ந்து 30.09.2024ல் தீபன்சக்கரவர்த்திக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். என் மகன் தீபன்சக்கரவர்த்தி என்னுடன் பிரஸ்சில் உதவியாக இருக்கிறார். அவருக்கு சம்பளம் எதுவும் கொடுப்பதில்லை. சர்வே எண் 92/2 சொத்தை தீபன் சக்கரவர்த்திக்கு பத்திரம்

எழுதி கொடுக்கப்பட்டது. என்னுடைய சொத்து என்பதால் பணம் வாங்காமல் எனது மகனுக்கு எழுதி கொடுத்து விட்டேன். ஹரிகரனுக்கு எழுதி கொடுத்த சொத்தும் பணம் வாங்காமல் தான் எழுதி கொடுக்கப்பட்டது. பிருந்தா எங்களுடன் இருப்பதாலும் அவருக்கு பாத்தியம் என்பதாலும் அவர் எழுதி கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் சர்வே எண் 92/2க்கான வில்லங்க சான்றிதழ் என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3.1.2024 அன்று நீதிமன்றத்தில் சொூத்துக்கள் சம்பந்தமாக எந்த வில்லங்கமும் ஏற்படுத்த கூடாது என்று ஐ.ஏ 1/2023ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற உத்திரவை மீறி ஹரிகரனுக்கும், தீபன்சக்கரவர்த்திக்கும் கிரைய பத்திரம் எழுதி கொடுத்தது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல.

15) வா.சா.ஆ.3 கொளந்தையம்மாவிடம் வாங்கிய கிரைய பத்திரம் படி வாங்கிய சொத்துக்கள் எனது அப்பா இறந்த பிறகு அவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் இன்னும் பாகபிரிவினை ஏற்படவில்லை. பல சொத்துக்கள் எனது அப்பா பெயரிலே பாகம் பிரிக்காமல் உள்ளது என்றால் சரிதான். 23.07.2001 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தில் வாதியின் கையெழுத்து எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் 1ம் பிரதிவாதி கையெழுத்தே போடவில்லை என்பதால் அந்த ஆவணம் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. என் அப்பா பச்சியப்ப செட்டியார் அவர் சுயமாக சம்பாதித்து தங்கவேல் நகரில் 3 பிளாட்டுகள் வாங்கி அதில் கடைகள் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம்

காட்டப்படும் புகைபடங்களில் காட்டப்படும் கடைகள் எனது அப்பாவிற்கு சொந்தமானது இல்லை.

*16)* என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழில் சர்வே எண் *91/1*ல் *3.50* ஏக்கர் எனது அப்பா வாங்கியதாக உள்ளது என்றால் இல்லை. சாட்சி தற்போது அந்த சொத்தை நான், எனது தம்பி என் அப்பா எல்லோரும் சேர்ந்து வாங்கியதாக சொல்கிறார். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழ் தான் நான், எனது அப்பா, எனது தம்பி வாங்கிய சொத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.*14*** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சொத்து தற்போதும் எனது அப்பா பெயரில் உள்ளதா என்றால் தெரியவில்லை. அந்த இடத்தில் உள்ள *3* கடைகளில் வாடகையை எனது தம்பி வாங்கி கொள்கிறார். நான் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழில் இந்த சொத்துக்களின் விவரத்தை மறைத்து கொடுத்துள்ளேன் என்றால் அந்த சொத்திற்கான வில்லங்க சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. என் அம்மாவை நாங்கள் சரியாக கூட கவனிக்கவில்லை என்றும் தங்கத்தில் தாலி கூட போடவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா தங்கத்தில் தாலி அணிந்திருந்தார். எனது அம்மாவின் மறைவிற்கு பிறகு அந்த தாலி என் வசம் தான் உள்ளது. என் அம்மாவின் தாலி அப்படியே உள்ளது. அதை பிரிக்க முடியாது என்பதால் யாருக்கும் பிரித்து கொடுக்கவில்லை. அது எவ்வளவு சவரன் என்று எனக்கு தெரியாது. தேவை என்றால் அதை எல்லோருக்கும் பிரித்து கொடுக்கலாம். தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.